அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.

சுற்றறிக்கை எண்.3590/ஏ–2/2025, நாள் 31.07.2025

– – –

பொருள் : நிர்வாகம் – அரசு பலவகை தொழில் நுடபக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – இந்திய திருநாட்டின் 78வது சுதந்திர தினவிழா கொண்டாட்டம் – தொடர்பாக.

– – –

<u>இந்திய திருநாட்டின் 78–வது சுதந்திர தினவிழா 15.08.2025 அன்று காலை 9.00 மணியளவில் இக்கல்லூரி முதல்வரால் கொடியேற்றி கொண்டாடவிருப்பதால்</u> அனைத்து மாணவர்கள் ஆசிரியர்கள் / அலுவலர்கள் / தொழில் நுட்ப/ அமைச்சுப் / அடிப்படை பணியாளர்கள் அனைவரும் தவறாமல் இவ்விழாவில் கலந்துகொண்டு விழாவினை சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் முனைவர்.இரா.லட்சுமிகிருஷ்ணன், உடற்கல்வி இயக்குநர் சுதந்திர தினவிழா கொண்டாட்டத்திற்கான விழா ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படியும், திரு.என்.தமிழரசன், திறன்மிகு உதவியாளர் கிரேடு–II, உடற்கல்வி இயக்குநருக்கு உதவிபுரியும்படியும் கேட்டுக்கொள்வதுடன், இவ்விழாவிற்கான சில்லரை செலவினங்களை நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளுக்குட்பட்டு மேற்கொள்ளவும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

சுதந்திர தினத்தை சிறப்பாக கொண்டாடும் விதமாக அனைத்து குழு பொறுப்பாசிரியர்களும் **(Club / Wing / NSS / YRC, etc., coordinators / Incharges)** மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொணரும் பொருட்டு உரிய போட்டிகள், நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தி பரிசுகள் வழங்க வகை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போட்டிகள் / நிகழ்ச்சிகள் குறித்த கருத்துரு விபரங்களை **<u>05.08.2025–க்குள்</u>** சமர்ப்பிக்குமாறும், சுதந்திர தினத்திற்கு முன்னதாக போட்டிகள் / நிகழ்ச்சிகள் நடத்தி சுதந்திர தினத்தில் பரிசுகள் வழங்கிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கடந்த ஏப்ரல்–2025 வாரியத் தேர்வுகளில் சிறப்பிடம் (முதல் மற்றும் இரண்டாம் இடம்) பெற்ற மாணவ / மாணவியருக்கு பரிசுகள் வழங்கிட** ஏதுவாக கருத்துரு அனுப்புமாறு துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–பா.பெ.கோவிந்தராசு
முதல்வர் (மு.கூ.பொ.)

பெறுநர்

| | |
|---|---|
| அனைத்து மாணவர்கள் / ஆசிரியர்கள் / அலுவலர்கள்/ முழு நேர தற்காலிக விரிவுரையாளர்கள்/ தொழில் நுட்ப / அமைச்சுப் / அடிப்படைப் பணியாளர்கள் | பயிலக வாட்ஸ்அப் குழு மூலம் |

நகல் இணையதள பொறுப்பாசிரியர்

..2..

| | |
|---|---|
| நகல் உடற்கல்வி இயக்குநர், குழு பொறுப்பாசிரியர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் | தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது |
| நகல் திரு.என்.தமிழரசன்,திறன்மிகு உதவியாளர் கிரேடு – II | துறைத்தலைவர் மூலமாக |

நகல் அறிவிப்பு பலகைக்கு ( பயிலகம் / விடுதிகள் )

நகல் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் / இளைஞர் செஞ்சிலுவை சங்க அலுவலர்

நகல் முதல்வரின் மேசைக்கு

நகல் துணை முதல்வர்

நகல் முதல்வரின் நேர்முக உதவியாளர்

நகல் பொருளாளர்

நகல் கண்காணிப்பாளர் (நிர்வாகம்/கணக்குகள்)

நகல் பி–4 இருக்கை எழுத்தர் ) தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது

நகல் ஏ–2 இருப்பு கோப்பு

நகல் உதிரி

முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசு பாலிடெக்னிக் கல்லூரி
கெலமங்கலம் – 635 113,
கிருஷ்ணகிரி மாவட்டம்

1.8.25